# வானிலை சார்ந்த வேளாண் ஆலோசனை அறிக்கை

இணைந்து வழங்குபவர்கள்
பிராந்திய வானிலை மையம் சென்னை - இந்திய வானிலைத் துறை
ரெட்டியார்சத்திரம் விதை உற்பத்தியாளர்கள் சங்கம் மற்றும்
ம. சா. சுவாமிநாதன் ஆராய்ச்சி நிறுவனம்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| மாவட்டம் : | புதுக்கோட்டை | காலம் : | 21/03/2018 | முதல் | 25/03/2018 |
| அறிக்கை எண் : | 023/ 2018 | வெளியீட்டு நாள் : | | 20/03/2018 | |

| கடந்த கால வானிலை 16/03/2018 முதல் 19/03/2018 வரை | |
|---|---|
| காரணிகள் | கடந்த கால வானிலை |
| மழை (மி.மீ) | 4.9 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 30-37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 24-26 |
| மேக மூட்டம் | 3-8 |
| ஈரப்பதம் (சதவீதம்) | 33-84 |
| காற்றின் வேகம்(கி.மீ. / மணி) | 5-12 |

எதிர்பார்க்கப்படும் வானிலை ( 25-03-2017 8.30 மணி வரை )

| காரணிகள் | 21-03-2018 | 22-03-2018 | 23-03-2018 | 24-03-2018 | 25-03-2018 |
|---|---|---|---|---|---|
| | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
| மழை (மி.மீ) | 0 | 0 | 0 | 0 | 0 |
| அதிக பட்ச வெப்பநிலை (செ) | 36 | 36 | 37 | 37 | 37 |
| குறைந்த பட்ச வெப்பநிலை (செ) | 25 | 25 | 26 | 26 | 26 |
| மேக மூட்டம் | 4 | 4 | 4 | 4 | 4 |
| அதிக பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 70 | 70 | 65 | 65 | 65 |
| குறைந்த பட்ச ஈரப்பதம் (சதவீதம்) | 50 | 50 | 40 | 40 | 40 |
| காற்றின் வேகம் (கி.மீ/மணி ) | 8 | 8 | 10 | 10 | 10 |
| காற்றின் திசை | தென்கிழக்கு | தென்கிழக்கு | கிழக்கு | கிழக்கு | கிழக்கு |

**குறுஞ்செய்தி :**
அடுத்த 5 நாட்களுக்கு மழை பெய்ய வாய்ப்பு இல்லை. வானம் மிதமான மேகமூட்டத்துடன் காணப்படும். மணிக்கு 8 முதல் 10 கி.மீ வேகத்தில் காற்று வீசக்கூடும்.

**எதிர்பார்க்கப்படும் வானிலைக்கேற்ற வேளாண் ஆலோசனைகள்**
**முக்கிய பயிர்கள் : வெண்டை & ( கால்நடை)**

தற்போது நிலவும் வெப்பநிலையில் வெண்டையில் மஞ்சள் நரம்புத் தேமல் நோய் காணப்படுகின்றது. இது மிகவும் அதிக அளவில் வெண்டையை தாக்கக் கூடிய ஒரு நச்சுயிரி நோய் ஆகும். வெள்ளை ஈக்கள் மூலம் இந்நோய் ஒரு செடியிலிருந்து மற்றொரு செடிக்கு பரவுகின்றது. இப்பூச்சியை கட்டுப்படுத்த ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2.5 மில்லி குளோரிபைரிபாஸ் மற்றும் 2 மில்லி வேம்பு எண்ணையை கலந்து தெளிக்கவேண்டும். மேலும் இந்நோயைத் தாங்கி வளரக் கூடிய இரகங்காளன பார்பானி கிராந்தி, அர்கா அனாமிகா மற்றும் அர்கா அபஹாப் போன்றவற்றை சாகுபடி செய்யவேண்டும்.

தற்போது நிலவி வரும் வானிலையின் காரணமாக கால்நடைகளில் அயர்ச்சி ஏற்படும் வாய்ப்புகள் உள்ளதால். கால்நடை வளர்ப்போர் தங்களின் கன்றுகளுக்கு நாள் ஒன்றுக்கு 30 கிராம் தாதுஉப்புக்கலவை கொடுக்கவேண்டும் மேலும் கன்றுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்தல் வேண்டும்.